1978 மார்ச் 9]

திரு. எஸ். கணேசன் : என்னுடைய கேள்வி, தகுதி வாய்ந்த மருத்துவ நிபுணர்கள் நியமிக்கப்படவில்லை என்று சொன்னேன். அங்குள்ள பெண் டாக்டரைப் பற்றி அரசுக்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : எந்தப் புகாரும் இது வரை வரவில்லை.

சென்னை நகரில் வீடு புகுந்து திருடும் நிகழ்ச்சிகள்.

*483. வினா—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் 1976-77 ஆம் ஆண்டில் வீடு புகுந்து திருடும் நிகழ்ச்சிகள் எத்தனை நடைபெற்றன ?

(ஆ) இது தொடர்பாக எத்தனை பேர் கைது செய்யப் பட்டனர் ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் :

(அ) 4,162.

(ஆ) 1,814.

திரு. எம். ஏ. ஜெயவேலு : சமீபத்தில் குற்றங்கள் அதி கரித்திருப்பதாகத் தெரிகிறது. மயிலே மயிலே என்றால் இறகு போடாது, இந்தக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க அதிகமான சுதந்திரம் காவல் துறையினருக்குக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : என்னிடம் புள்ளிவிவ ரங்களே இருக்கின்றன. காவல் துறையினர் அதிக தீவிரமாகப் பணியை மேற்கொண்டு குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதிலே, வழக்குகள் போடுவதிலே முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். ஆக ஒழுங்கான முறையில் காவல் துறை இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. செல்லப்பன் : வீடு புகுந்து திருடிய நிகழ்ச்சிகளில் கொலைகள் நடந்துள்ளனவா ? ஆம் எனில், அதுபற்றிய தகவலை அவைக்குத் தர இயலுமா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : திருட்டு வழக்குகளுக்காக கைது செய்யப்பட்டவர்களுடைய விவரங்கள்தான் என்னிடத்திலே இருக்கின்றன. திருட்டு வழக்கிலே ஈடுபட்ட காரணத்தாலே கொலையுண்டவர்கள் பற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே ஹவுஸ் பிரேக்கிங் செய்தவர்கள் 1,814 பேர்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், அதிலே அரசியல் கட்சி சம்பந்தப்பட்டவர்கள் இந்தக் குற்றங்களைச் செய்திருக்கிறார்களா? அவர்களிலே எத்தனை பேர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, இப்படி நடக்கின்ற திருட்டுகள் குறிப்பாக அண்ணா நகரிலே, அசோக் நகரிலே, பெசன்ட் நகரிலே இப்படிப்பட்ட எக்ஸ்டன்ஷன் ஏரியாக்களிலேதான் அதிகமாக நடக்கின்றன. பகலிலே வேலைக்கு வந்து விடுவதால் அந்த நேரத்திலே புகுந்து எப்படியோ திருடி விடுகிறார்கள். இவைகளைத் தடுப்பதற்காக தனிக் கவனம் செலுத்தி பகலிலே அந்தப் பகுதிகளிலே எல்லாம் போலீஸ் ரோந்து போடுவதற்கு அரசாங்கத்திற்கு எண்ணம் உண்டா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இந்த நல்ல யோசனையை அரசு ஏற்றுக்கொள்ளும்.

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, சென்னையில் சென்னை நகரம் இப்போது விரிவுபடுத்தப்பட்டுக் கொண்டு வருகிறது, வியாசர்பாடி போன்ற பகுதிகளிலே எல்லாம் இப்படிப்பட்ட திருட்டுகள் அடிக்கடி நடக்கின்றன; காரணம் அந்தப் பகுதிகளிலே எல்லாம் போலீஸ் நிலையங்கள் அமைக்கவில்லை. இதுபோன்றுதான் இந்திரா நகரிலே நடந்த கொலை கூட. ஆகவே இப்படி விரிவுபடுத்தப்படுகிற இடங்களிலே போலீஸ் நிலையங்களை அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இந்த யோசனைபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், சென்னை நகரத்தில் மட்டுமல்ல, இதுபோன்று வேறு மாவட்டங்களிலேயும் பல பகுதிகளிலே இப்படிப் பரவலாக நடந்து கொண்டிருக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இப்படி கொள்ளை அடிப்பது மட்டுமல்ல, பூட்டை உடைத்து வீட்டில் நுழைந்து

1978 மார்ச் 9]

திருடுவது எல்லாம் இருக்கிறது. மயக்க மருந்து கொடுத்து உள்ளே இருக்கிறவர்களுடைய கை கால்களைக் கட்டிப் போடக் கூடிய அளவுக்கு இந்த நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே இப்படிப்பட்ட முறைகள் நடக்காமல் இருக்கக்கூடிய முறையிலே நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : திரு. கோதண்டராமன் அவர்கள் சிலர் எப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் செய்கிறார்கள் என்று கற்றுத் தந்தமைக்காக அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு நிச்சயமாக தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்று உறுதி அளிக்கிறேன்.

திரு. தீ. சு. நல்லதம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, இரவிலேயும் பகலிலேயும் சென்னையிலே அண்ணா நகர் போன்ற பகுதிகளிலே கொள்ளை அடிக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் கட்டுப்படுத்துவதற்கு போதுமான ஜவான்கள் இல்லை என்று சொல்லப்படுகிறது. உதாரணத்திற்கு, நான் கேள்வி நேரம் என்றாலும் சொல்லிக்கொள்கிறேன், அண்ணா நகரின் விஸ்தீரணம் ஏறக்குறைய 3, 4 மைல் இருக்கும், இவ்வளவு பரந்த இடத்திலே திருட்டுப் போய்விட்டால் ஜவான்கள் ஒருவர் அல்லது இருவர்தான் இருப்பதால் கண்டுபிடிக்க முடியவில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள், ஆகவே அந்தக்குறையைப் போக்குவதற்கு அதிகமான ஜவான்களைப் போடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நிச்சயம் இதுபற்றி ஆராய்ந்து அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. சிகாமணி : தலைவர் அவர்களே, 1976—77 ஆம் ஆண்டிலே நடைபெற்ற வீடு புகுந்து திருடும் நிகழ்ச்சிகள் முந்தைய ஆண்டைவிட அதிகமா, குறைவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : முன்னைவிட இந்தக் குற்றங்கள் குறைந்து வருகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சாத்தனூர் மேல்மட்டக் கால்வாய்.

*461. வினா—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சாத்தனூர் அணையின் இடதுபுற மேல்மட்டக் கால்வாய் வேலை என்ன நிலைமையில் உள்ளது ?